**இம்புள்பே பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இம்புள்பே பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் இம்புள்பே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த மற்றும் அன்பளிப்பாக கிடைத்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 544,702 ஆன போதும், அப் பெறுமதியை ரூபா 3,186,731 ஆக மூலதமனமாக்கியுள்ள காரணத்தால் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் வருமானத்தால் மூலதனத்திற்கு பங்களிக்கும் கணக்கின் மீதி ரூபா 2,642,029 கூடுதலாக காட்டப்பட்டன. | ஜர்னல் குறிப்பினூடாக சீராக்குவதாக. | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | ஆண்டினுள் கொள்வனவு செய்த ரூபா 791,435 பெறுமதியான நிலையான சொத்துக்களை மூலதனமாக்காததால் மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் வருமானத்தால் மூலதனத்திற்கு பங்களிக்கும் கணக்கின் மீதி அப்பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டன. | ஜர்னல் குறிப்பினூடாக சீராக்குவதாக. | ஆண்டிலுள் கொள்வனவு செய்த அனைத்து நிலையான சொத்துக்களையும் மூலதனமாக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரை கட்டண வருமானத்தை கணக்கீடு செய்கையில் முத்திரை கட்டண கட்டுப்பாட்டு கணக்கை | 2021 ஆண்டில் சீராக்குவதாக | கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு வைத்து ஏனைய வருமான கணக்கை வரவு வைத்திருந்ததால் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் மற்றும் வருமான கடன்படுனர் ரூபா 920,550 இனால் குறைத்து காட்டப்பட்டது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 19,178 கணக்கீடு செய்திருக்காததால் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டன. | 2021 ஆண்டில் சீராக்குவதாக | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 13,500 ஆன குப்பை வரி நிலுவையை குப்பை வரியாக கணக்கீடு செய்துள்ளமையால் மீளாய்வாண்டில் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டதுடன் நடைமுறை பொறுப்புக்கள் சமமான பெறுமானத்தால் குறைத்தும் காட்டப்பட்டன. | ஜர்னல் குறிப்பினூடாக சரி செய்வதாக. | குறித்த கணக்கு மீதியை சரி செய்ய வேண்டும். |
| (ஊ) | இலக்கம் 2247306 கொண்ட நடைமுறை கணக்கு (சுற்றாடல் பெறுவனவு) மீதி ரூபா 877,683 ஆன போதும் அதனை ரூபா 862,343 ஆக நிதிக்கூற்றுகளில் காட்டியுள்ளதால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 15,340 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | பேரேட்டு கணக்கு மீதிகளை சரியாக நிதிக்கூற்றுகளிற்கு உள்ளடக்க வேண்டும். |

## 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் காட்டப்படும் 04 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணை பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில் ரூபா 11,572,014 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | தவறை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதனுடன் தொடர்புடைய துணை பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 (5) | 2010 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை 23 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 8,660,593 ஆன மீண்டுவரும் மற்றும் மூலதன முற்பணங்களை 2020 திசெம்பர் வரையும் தீர்த்திருக்கவில்லை. | இம் முற்பணத்தை அக் காலப்பகுதியில் தீர்துள்ள போதும் பதிவேடுகளில் குறிப்பிடப்படாததால் ஏற்பட்ட மீதிகள் என அனுமானிக்க முடியும். அதனால் பொருத்தமான வழிமுறையொன்றை பின்பற்றி அம் மீதியை ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 9,772,843 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 2,687,248 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாகவுள்ள ஏக்கர் வரி மீதி ரூபா 116,142 ஆன போதும் ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய காணிகள் தொடர்பாக ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு நிலுவை குத்தகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் பிரிக்கப்படுவதால் ஏக்கர் வரி அறவிடுவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் தற்போது காணப்படும் அளவை மதிப்பீடு செய்ய மதிப்பீட்டு திணைக்களத்தை அறிவூட்டியுள்ளதுடன் அப் பரிந்துரை பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு அறவிட வேண்டிய நிலுவை வரியை சரியாக இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளிற்குரிய நிலுவை நீர் கட்டணம் ரூபா 6,835,186 வை அறவிட சபை போதிய செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | கொவிட் 19 தொற்று காரணமாக திட்டமிட்ட பிரகாரம் 2020 ஆண்டின் போது நிலுவை நீர் கட்டணத்தை அறவிட முடியாது போனது. நிலுவையை அறவிட எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்<br>--------------------------------------------------------------------- | | |
| | மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலத்திற்குரிய கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 3,207,550 ஆனதுடன், 2020 மே முதல் திசெம்பர் வரை காலத்திற்குரிய அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2021 பெப்ரவரி வரை இனங்கண்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக உரிய காலத்தில் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் குறித்த கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை இனங்கண்டு அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அனுமதியற்ற நிர்மாண கட்டுப்பாடு உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்பான போதும் அவ்வாறான நிர்மாணங்களை இனங்காண்டிருக்காததுடன், 2016 முதல் 2020 நவம்பர் 30 வரை அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக கிடைத்த 10 பொது மக்கள் பிரதிநிதித்துவங்களில் 05 தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓடைகள், ஆறுகள் நதிகள் அன்மித்த அனுமதியின்றி நிர்மாணித்துள்ள கட்டிடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கையில் காணி உரிமையாளர்களின் உடமையை உறுதி செய்வதற்காக காணப்படும் ஆவணங்களில் காணியின் எல்லையாக ஓடைகள், ஆறுகள் நதிகள் குறிப்பிடப்பட்டுள்ளதால் சட்ட பிரச்சினை ஏற்படுவதால் காப்பிடங்களிற்கான குறித்த காணி அளவுகளை ஒதுக்கி அளவை வேலைகளை மேற்கொள்வது பொருத்தமென குறித்த நிறுவனங்களை அறிவூட்டியுள்ளதாக. | அனுமதியற்ற நிர்மாண கட்டுப்பாடிற்காக தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| புறஎழுச்சி கருத்திட்டத்தின் மூலம் ரூபா 42,000,000 செலவில் 2016 ஆகஸ்ட் மாதம் சபைக்கு நிர்மாணித்து ஒப்படைக்கப்பட்ட கலகம பலநோக்கு கட்டிடத்தை உரிய செயற்பாடுகளிற்கு பயன்படுத்தாது 04 வருட காலமாக விளைவற்று நிலவியது. 2020 வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அக் கட்டிடத்தின் சூரிய ஒளிச் சக்தி தொகுதியொன்றை பொருத்த திட்டமிட்டிருந்த போதும், 2020 திசெம்பர் வரையும் அதற்காக செயற்பட்டிருக்கவில்லை. | புறஎழுச்சி கருத்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கலகம பலநோக்கு கட்டிடத்தை வருமானம் உழைக்க பயன்படுத்துவதற்காக சோலா தொகுதியொன்றை தற்போது பொருத்தியுள்ளதுடன், அதன் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | பலநோக்கு கட்டிடத்தை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 கருத்திட்டம், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பம்பஹின்ன வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் ரூபா 4,561,397 செலவிட்டிருந்த போதும், சந்தையை நடாத்துவதற்கு பொருத்தமான வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காததுடன் மீளாய்வாண்டினுள் குறித்த நோக்கத்தை அடைந்து கொள்ள சபைக்கு இயலாதிருந்தது. | இச் சந்தை வளவின் எஞ்சியுள்ள வேலைகள பூர்த்தி செய்ய 2018 ஆண்டில் உள்ளூராட்சி அமைச்சிற்கு மதிப்பீட்டை அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதுடன், நிதி ஒதுக்கீடு கிடைத்த பின்னர் வாராந்த சந்தை வியாபாரிகளுக்கு பயன்படுத்தக் கூடியவாறு தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | ஒதுக்கீட்டை பெற்றுக் கொண்டு சந்தையை நடாத்த பொருத்தமான வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும். |